கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்கள் மேலாக

**Under Section 173 BNSS**

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM

03/07/24

# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
[illegible]

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165119

1. District மாவட்டம் : RAMANATHAPURAM PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 15/2024 Date: நாள் 03.07.2024

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of P.C. Amendment Act. 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.07.2024 Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் மதியம் சுமார் 12 மணி Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.07.2024 Time : நேரம் 13.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் [illegible]-II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடக்கு / மேலாக
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தொண்டி பேரூராட்சி அலுவலகம் சுமார் 50 கி.மீ வடக்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. முகம்மது இபுராஹிம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முகம்மது ஹனிபா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 33/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் டிரைவர் (g) Address : முகவரி 9/15. தாவீஸ் நகர், தொண்டி, திருவாடானை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. மாணிக்கம், சாலை ஆய்வாளர், தொண்டி பேரூராட்சி அலுவலகம்
2) திரு. ரவிச்சந்திரன், உதவியாளர், தொண்டி பேரூராட்சி அலுவலகம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 03.07.2024ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு அலுவலில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுகா, தொண்டி, அணீஸ் நகரைச் சேர்ந்த முஹம்மது இபுராம்ஷா, வயது 33/2024 த/பெ முஹம்மது ஹனிபா, என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் எதிரி திரு.பூமிசந்திரன் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 15/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018ன்படி இன்று 03.07.2024 ம் தேதி காலை 13.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.[signature] 03/07/2024 [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.07.2024 - 16.00 மணி

Name: பெயர் ....
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு, இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 15/2024 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

அனுப்புநர் முஹம்மது இபுராம்ஷா, வயது 33/2024 த/பெ முஹம்மது ஹனிபா, 9/15, அணீஸ் நகர், தொண்டி, திருவாடனை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக பணி பார்த்து வருகிறேன் கூடவே எங்கள் ஊரைச் சேர்ந்த பெங்களூரில் வசித்து வரும் அம்சத் அலி என்பவருக்கு சொந்தமாக தொண்டி பேரூராட்சி சர்வே எண் 85/1ல் 1500 சதுரஅடி கொண்ட இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு தளங்களுடன் கூடிய இரண்டு குடியிருப்பு வீடுகளையும், இரண்டு கடைகளையும் அவரது இரண்டாவது மகன் அப்துல் பாசித் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் பராமரித்து வருகிறேன். மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதிக்காக கட்டிட உரிமையாளர் திரு.அம்சத் அலி எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.அப்துல் நயினா முகம்மது என்பவரின் மூலம் தொண்டி பேரூராட்சியில் மனு கொடுத்து கட்டிட வரைபட அனுமதி பெற்றார். மேலும் மேற்படி திரு.அப்துல் நயினா முகம்மது அவர்களிடம் சொல்லி சொத்து வரி ரசீது பெற சொன்னதின்பேரில் மேற்படி நபர் தொண்டி பேரூராட்சியில் சொத்து வரி ரசீது கேட்டு கடந்த 2024 பிப்ரவரி மாதம் விண்ணப்பம் கொடுத்துவிட்டு செயல் அலுவலர் திரு.மகாலிங்கம் அவர்களை சந்தித்து விபரம் கேட்டபோது வீட்டு உரிமையாளரை வரச்சொன்னதாக மேற்படி திரு.அம்சத் அலி என்பவரின் இரண்டாவது மகன் திரு.அப்துல் பாசித் என்பவரிடம் சொன்னபோது, மேற்படி அப்துல் பாசித் மேற்படி கட்டிடங்களை பராமரித்து வரும் என்னை தொண்டி பேரூராட்சி அலுவலகம் செல்ல சொன்னார். அதன்தொடர்ச்சியாக கடந்த 28.06.2024 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் தொண்டி பேரூராட்சியில் பணிபுரியும் செயல் அலுவலர் மகாலிங்கம், உதவியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர்கள் நான் பராமரித்து வரும் மேற்படி கட்டிடத்திற்கு வந்து ஆய்வு செய்து விட்டு திங்கட்கிழமை ஆபிசில் வந்து பாருங்க

எனசொல்லி விட்டு சென்றார்கள். அதன்படி நான் கடந்த 01.07.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் மீண்டும் தொண்டி பேரூராட்சிக்குச் சென்று அங்கு பணிபுரியும் உதவியாளர் ரவிச்சந்திரனை நேரில் சந்தித்து விபரம் கேட்டதற்கு, உங்கள் மனு செயல் அலுவலரிடம் உள்ளது நீங்க அவரை போய் பாருங்கள் எனக்கூறினார். அதனைத்தொடர்ந்து நான் செயல் அலுவலர் மகாலிங்கம் என்பவரை அவரது அறைக்கு சென்று சந்தித்து விபரம் கேட்ட போது, நீங்க உதவியாளர் ரவிச்சந்திரனை பாருங்க கவர்மெண்டு பீசு போக எனக்கு எவ்வளவு ரூபாய் தர வேண்டுமென்று அவரிடம் சொல்லி விடுகிறேன் அதை உடனே கொடுத்துட்டா உடனே சொத்து வரி ரசீது ஆன்லைன்ல போட்டு எவ்வளவு கட்டணும் என்று சொல்லிடுவாரு என்று கூறினார். பின்னர் நான் அங்கிருந்த உதவியாளர் ரவிசந்திரனை நேரில் சந்தித்து விபரம் கேட்ட போது சொத்து வரி ஆன்லைனில் பார்த்து சொல்றதுக்கு முன்னாடி செயல் அலுவலருக்கு ரூ.20,000/– தனியாக கொடுக்கனும் மேலும் சொத்துவரி குறைந்தது ரூ.15,000/– வரை வரும் எனக்கூறியதாக சொன்னார். பின்பு மீண்டும் இன்று 03.07.2024 ஆம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு செயல் அலுவலர் மகாலிங்கத்திடம் உதவியாளர் ரவிச்சந்திரன் சொன்ன பணத்தை தர இயலாது என தகவல் சொல்ல தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவர் கராராக ஏற்கனவே சொன்ன பணத்தை கொடுத்தால் தான் வேலை நடக்கும் எனவே இன்று சாயங்காலம் நேரில் பணத்தோடு வாங்க எனக்கூறியதால் நான் வேறு வழியில்லாமல் சரி பார்க்கலாம் என சொல்லி விட்டு, வீட்டில் இருந்து யோசித்து பார்க்கும் போது அரசு பணியை செய்வதற்காக லஞ்சமாக பணம் கேட்ட தொண்டி பேரூராட்சி செயல் அலுவலர் மகாலிங்கம் மற்றும் உதவியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்தேன். இது சம்பந்தமாக அம்சத் அலி என்பவரின் இரண்டாவது மகன் அப்துல் பாசித் என்பவரிடம் மேற்படி விஷயத்தை சொன்னபோது அவருக்கும் சொத்து வரி ரசீது பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லையென்று சொல்லி மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீஸில்

புகார் கொடுக்க சொன்னார். எனவே அம்சத் அலி அவர்களின் பெயரில் சொத்து வரி வழங்க லஞ்சமாக ரூபாய் 20,000/- கொடுக்க விருப்பம் இல்லாததால், என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட தொண்டி பேரூராட்சி செயல் அலுவலர் மகாலிங்கம் மற்றும் உதவியாளர் ரவிசசநதிரன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுத்து சொத்துவரி ரசீது கிடைப்பதற்கு ஆவண செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (M.Ibramsha) 03.07.2024 அய்யா, மேற்படி புகாரை இன்று 03.07.2024ம் தேதி 13.00 மணிக்கு என்னால் பெறப்பட்டு வாதி மற்றும் எதிரிகளின் முன்னடத்தை பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு இன்று 03.07.2024ம் தேதி 13.15 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 15/2024 பிரிவு 7 (a) of P.C. Act, 1988 as amended in 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன். ஒப்பம் (M.Kumerasan), 01.07.2024, Inspr., V&AC, Rmd. முதல் தகவல் அறிக்கை அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

03/07/2024

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

இராமநாதபுரம்.